22 DEC 2016

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு

## 2012/2013

# OCR 2263 Good Governance & Team Work

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி I இல் இருந்து எவையேனும் இரு வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

---

### பகுதி – I

1. அ) "ஆளுகை"(Governance) என்பதற்கான வரைபிலக்கணத்தைக் கூறி நல்லாளுகை(Good Governance) தீயாளுகை (Bad Governance) தொடர்பான உமது பொருள்கொள்ளலைக் குறிப்பிடுக. (10 புள்ளிகள்)

ஆ) நல்லாளுகையின் பிரதான பண்புகளில் ஐந்தினைத் தெரிந்து அவற்றைப் பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக. (15 புள்ளிகள்)

2. அ) "குழு" என்பதனை வரைவிலக்கணங்களுக்கூடாகத் தெளிவாக்குக. (10 புள்ளிகள்)

ஆ) குழு அபிவிருத்திப் படிநிலைகளை ஒழுங்கு முறையில் விளக்குக. (15 புள்ளிகள்)

3. அ) தீர்மானம் எடுத்தல் தொடர்பான குழுச் செயற்பாடுகளின் போது குழு உறுப்பினரிடையே வெளிப்படுகின்ற திறன்களைச் சுருக்கமாகத் தருக. (10 புள்ளிகள்)

ஆ) குழு உறுப்பினர்களை இறுதி இலக்கினை நோக்கி வழிநடாத்துவதில் இணக்கப்பாட்டாளர்(Negotiator) எனும் திறன் படைத்தவரின் பங்கு எத்தகையதெனக் காட்டுக. (15 புள்ளிகள்)

### பகுதி – II

4. மகாத்மாகாந்தி, முகம்மதுநபி, ஆகிய இருவருள் ஒருவரைத் தெரிந்து அவர் தன்னுடைய வாழ்வில் நல்லாளுகை (Good Governance)கடைப்பிடித்த பாங்கினை ஆராய்க. (25 புள்ளிகள்)

5. கௌடலியரின் அர்த்தசாஸ்திரம் வெளிப்படுத்துகின்ற நல்லாளுகைக் கருத்துக்களைப் பொருத்தமான எடுத்துக்காட்டுக்களின் வழி வெளிப்படுத்துக. (25 புள்ளிகள்)

6. பல்சமயப் பெரியார்களுள் ஒருவரைத் தெரிந்து அவர் சிறந்த ஒரு இணக்கப்பாட்டாளராக (Negotiator) வாழ்ந்தார் என்பதனைத் தகுந்த எடுத்துக்காட்டுக்களினூடாக நிருபிக்குக. (25 புள்ளிகள்)